# ශ්‍රී ලංකා ප්‍රජාතාන්ත්‍රික සමාජවාදී ජනරජයේ ගැසට් පත්‍රය
# இலங்கைச் சனநாயக சோசலிசக் குடியரசு வர்த்தமானப் பத்திரிகை

අති විශෙෂ அதி விசேஷமானது

අංක 2449/ 12 - 2025 අගෝස්තු මස 12 වැනි අඟහරුවාදා - 2025.08.12

2449/12 ஆம் இலக்கம் - 2025 ஆம் ஆண்டு ஓகத்து மாதம் 12 ஆந் திகதி செவ்வாய்க்கிழமை

(அரசாங்கத்தின் அதிகாரத்துடன் பிரசுரிக்கப்பட்டது)


# பகுதி I : தொகுதி (I) - பொது

## அரசாங்க அறிவித்தல்கள்

மஹியங்கனை எசல உற்சவம் - 2025

362 ஆம் அதிகாரமான யாத்திரைகள் கட்டளைச் சட்டத்தில் வெளியிடப்பட்டுள்ள 1948 ஆம் ஆண்டு செத்தெம்பர் மாதம் 10 ஆந் திகதிய 9902 ஆம் இலக்க வர்த்தமானப் பத்திரிகையிலும் 1951 ஆம் ஆண்டு ஓகத்து மாதம் 17 ஆம் திகதிய 10283 ஆம் இலக்க வர்த்தமானப் பத்திரிகையிலும், 1955 ஆம் ஆண்டு மாச்சு 25 ஆந் திகதிய 14778 ஆம் இலக்க வர்த்தமானப் பத்திரிகையிலும், 1967 ஆம் ஆண்டு யூன் மாதம் 09 ஆந் திகதிய 14752 ஆம் இலக்க வர்த்தமானப் பத்திரிகையிலும் வெளியிடப்பட்டுள்ள மஹியங்கனை தலயாத்திரை யாப்பிலும் 1992 ஆம் ஆண்டின் 58 ஆம் இலக்க அதிகாரங்களை கையளித்தல் (பிரதேச செயலாளர்கள் ) சட்டத்தின் படியும் மஹியங்கனை பிரதேச செயலாளர் விக்ரமநாயக விமங்ச செனவிரத்ன ஆகிய எனக்கு கையளிக்கப்பட்டுள்ள அதிகாரங்களுக்கமைய 2025 ஆம் ஆண்டின் மஹியங்கனை எசல உற்சவ முகாம் தொடர்பாக கீழ்க் குறிப்பிடப்பட்டுள்ள ஆணைகளை பிறப்பிக்கின்றேன்.

1. 2025 ஆம் ஆண்டு ஓகத்து மாதம் 25 ஆந் திகதி கொடியேற்றத்துடன் மஹியங்கனை எசல உற்சவம் ஆரம்பமாகி 2025 ஆம் ஆண்டு செத்தெம்பர் மாதம் 08 நீர் வெட்டுதலுடன் நிறைவுறும் என்பதை இத்தால் அறியத்தருகின்றேன்.

2. மஹியங்கனை - பிபில பிரதான வீதி கி.மீ. 37 இருந்து மஹியங்கனை தேசிய பாடசாலைக்கு முன்னால் காணப்படும் 2/39 வடிகாண் வரையும், வில்லுவ வெவ வீதி தொடக்க பகுதியிலிருந்து மஹியங்களை வைத்தியசாலைக்கு முன்னால் மணிக்கூட்டு கோபுர அருகிலுள்ள கங்கவட வீதி, அங்மெடில்ல வீதி மற்றும் தேவால வீதி போன்ற எல்லைகளுக்குட்பட்ட நடுவில் அமைந்துள்ள பூமிப் பிரதேசம் யாத்திரிகர்கள் தங்குவதற்கான முகாம் பிரதேசமாக பெயரிடுகின்றேன்.

3. சைத்திய பீடம், போமலுவ, விகாரை பூமி போன்ற பகுதிகள் மற்றும் அதனை சூழவுள்ள பகுதிகளில் உணவு சமைத்தல் மற்றும் விற்பனை செய்வதை தடை செய்கின்றேன்.

4. மெத வீதியில் சைத்தியவுக்கு நேராக காணப்படும் நில நெடு வரிசையில் மற்றும் மகரதோரணத்திற்கு இடது பக்கத்தில் அமைந்துள்ள நில நெடு வரிசையில் பிரதேச செயலாளர்/ முகாம் பொறுப்பதிகாரியினால் வழங்கப்பட்டுள்ள அனுமதிப்பத்திரத்தின் கீழ் மலர்கள், பத்தி, மெழுகுவர்த்தி, கற்பூரம், நேர்த்திகளை நிறைவேற்றுவதற்கு தேவையான படங்கள் மற்றும் பூசைப்பொருட்கள் விற்பனை செய்வதற்காக அனுமதியளிக்கின்றேன்.

5. மேற்கூறிய பொருட்களை விற்பனை செய்வதற்காக ரஜ மகா விகாரை மற்றும் சமன் தேவாலயத்தின் மூலம் நிர்மாணிக்கப்பட்டுள்ள நிரந்தர விற்பனை நிலையங்கள் 60 இற்குள் தவிர்ந்த எஞ்சிய பகுதியினுள் சைத்தியவுக்கு நேராக காணப்படும் நில நெடு வரிசையில் மேலாகவும் அனுமதியளிக்கின்றேன்.

6. இதில் இரண்டாவது பிரிவில் குறிப்பிடப்பட்டுள்ள முகாம் நிலப்பரப்பினுள் பிரதேச செயலாளரின் / முகாம் பொறுப்பதிகாரியிடம் பெற்றுக் கொண்ட அனுமதிப்பத்திரத்திற்கு அப்பால் நிர்மாணிக்கப்பட்டுள்ள தற்காலிக கட்டிடங்களில் மற்றும் தற்போது நிர்மாணிக்கப்பட்டுள்ள நிரத்தர கட்டிடங்கள் 60 இல் யாத்திகிகர்களுக்கு உணவு குடிபானங்களை பகிர்ந்தளிப்பதற்கும் அல்லது விற்பனை செய்வதற்காகவும் வேறு விற்பனை பொருட்களை விற்பனை செய்வதற்காகவும் அங்கீகாரம் வழங்குகின்றேன்.

7. பஸ்நாயக நிலமே அவர்கள், மற்றும் தலைமை மதகுருவினால் அறிவித்தலில் வெளியிடப்பட்டுள்ள பொரஹரா உலா வரும் வீதியின் துடுகெமுனு வீதி, மெத ஒழுங்கை அம்மெடில்ல வீதி, பதுளை - மஹியங்கனை பிரதான வீதி, போதிமலுவ ஒழுங்கை, மதகுருமாரின் தங்குமிட முன்னால் வீதி போன்ற வீதிகளின் இருமருங்கிலும் காணப்படும் தண்ணீர் வடிந்து செல்லும் வடிகாண்களிலிருந்து 10 அடிக்கு மேல் அமைந்துள்ள பிரதேசங்களில் வியாபார நடவடிக்கைகளுக்காக ஒதுக்குகின்றேன்.

8. வைத்தியசாலைக்கு முன்னால் மணிக்கூட்டு கோபுரத்திலிருந்து பதுளை பிரதான வீதி மகரதோரணம் வரை இருமருங்கிலும் மற்றும் நிரந்தர விற்பனை நிலையங்களுக்கு முன்னால் வியாபார நடவடிக்கைகளில் ஈடுபடுவதை தடை செய்கின்றேன்.

9. மேலுள்ள இலக்கம் 04,05, 06 போன்ற பிரிவுகளில் குறிப்பிடப்பட்டது தவிர, முகாம் பிரதேசத்திற்குள், உட்பட்ட வேறு எந்த இடத்திலும் தற்காலிக விற்பனை கூடங்களை நிர்மாணித்தல், விற்பனை செய்தல் மற்றும் கங்க வட வீதி இருமருங்கிலும் தற்போது நிர்மாணிக்கப்பட்டுள்ள விற்பனை கூடங்களை தவிர வேறு தற்காலிக விற்பனை கூடங்களை நிர்மாணிப்பதை முழுமையாக தடை செய்கின்றேன்.

10. பிரதான வீதிகளில் தனியார் வாகனங்கள் நிறுத்துவதை தடை செய்கின்றேன்.

11. சைக்கிள் மற்றும் வண்டிகள் உட்பட அனைத்து வாகனங்களும் பிரதேச செயலாளர்/ முகாம் பொறுப்பதிகாரி அல்லது அவரினால் அங்கீகாரம் பெற்ற வேறு உத்தியோகத்தரின் அனுமதிப்பத்திரம் இன்றி முகாம் பூமிக்குள் வருவதை தடை செய்கின்றேன்.

12. மஹியங்கனை பிபிலை வீதிக்கு நேராக நிர்மாணிக்கப்பட்டுள்ள வாககல்கட அருகில் புண்ணில் பூமிக்கு பிரவேசிக்கும் நுழைவாயில் வில்லுவவெ வீதி, மகரதோரணத்திற்கு அருகில் புண்ணிய பூமிக்கு பிரவேசிக்கும் நுழைவாயில் வைத்தியசாலைக்கு முன்னால் மணிக்கூடு கோபுரத்திற்கு அருகில் உள்ள வீதி, மற்றும் மஹியங்கனை தேசிய பாடசாலைக்கு முன்னால் காணப்படும் 2/39 வடிகாண் அருகில் உள்ள வீதிகளில் முகாம் பூமிக்குள் அனுமதிப்பத்திரம் இன்றி வாகனங்கள் பிரவேசிப்பதை தடை செய்கின்றேன்.

13. என்னால் முகாம் பூமிக்குள் வியாபாரம் செய்வதற்காக ஒதுக்கப்பட்டுள்ள காணித்துண்டுகளை குத்தகைக்கு வழங்கும் முறை தொடர்பாக அறிவித்தல் மூலம் பிரசுரிக்கப்படும்.

14. குத்தகைக்கு எடுக்கப்படும் விற்பனை பூமிக்குள் நிர்மாணிக்கப்படும் தற்காலிக கட்டிங்கள் மஹியங்கனை சுகாதார வைத்திய அதிகாரியின் ஆலோனைக்கு ஏற்படையதாக இருத்தல் வேண்டும்.

15. என்னால் கட்டளை வழங்கப்பட்டால் அனைத்து விற்பனை நிலையங்களுக்கு அருகில் மலசலகூடம் 01 றையோ அல்லது 02 றையோ நிர்மாணித்தல் வேண்டும்.

16. பூமி பிரதேசங்களை குத்தகைக்கு எடுக்கும் வியாபாரிகளினால் எசல உற்சவத்தின் பின் தமது தற்காலிக கட்டிடங்களை அகற்றியதன் பின், முகாம் பூமிக்குள் காணப்படும் பொலித்தீன் உட்பட அனைத்துக் குப்பைகளையும் ஒன்று சேர்த்து பொது சுகாதார பரிசோதகரின் ஆலோனையின் படி அகற்ற வேண்டும்.

17. என்னிடம் பெற்றுக்கொண்ட அனுமதிப்பத்திரம் இல்லாமல் முகாம் பூமிக்குள் எந்தவொரு நிரந்தர அல்லது தற்காலிக் கட்டிடங்களை அமைப்பதை தடை செய்கின்றேன்.

18. எவரேனும் ஒருவரினால் பிரதேச செயலாளர்/ முகாம் பொறுப்பதிகாரி அனுமதி இன்றி வீதியாக பயனபைடுத்துவதோ அல்லது ஒதுக்குவதோ அல்லது ஏதேனும் காணியைப் பயன்படுத்தி முகாம் பூமிக்குள் ஆற்றின் கரையோரமாக அமைந்துள்ள காணிக்குள் குடிசையோ அல்லது ஏதேனும் கட்டிட நிர்மாணிப்போ அல்லது பெரிதாக்குதலோ மேற்கொள்ளக்கூடாது.

19. பெரஹரவை பார்வையிடுவதற்காக கட்டணம் அறவிட்டு ஆசனங்களை ஒதுக்கிக் கொடுப்பது முற்றாக தடை செய்யப்பட்டுள்ளது.

20. பதுளை -மஹியங்கனை பிரதான வீதியில் வலயக் கல்வி அலுவலகத்தின் அருகிலிருந்து புதிய கொவிட் ஆய்வுகூட அலகு வரையான பகுதிகளில் தற்காலிக விற்பனை கூடங்களை நிர்மாணிப்பதை தடை செய்கின்றேன்.

21. வாகன தரிப்பிடங்கள் -

  1. புண்ணிய பூமியாக பெயரிடப்பட்டுள்ள வாகன தரிப்பிடம் (வைத்தியசாலைக்கு முன்னால் உள்ள பூமி பிரதேசம்)

  2. சிறிசங்கபோ முன்பள்ளி மற்றும் மகரதோரணத்தின் இடது பக்க நிலப்பகுதியிலிருந்து போமலுவ வீதி வரை உள்ள நிலப்பகுதி

  3. வில்லுவவெவ வீதி மற்றும் மஹியங்கனை - பிபிலை வீதிக்கு நடுவில் காணப்படும் முக்கோண நிலப்பகுதி போக்குவரத்து சபைக்கான பேருந்து வண்டி நிறுத்துவதற்காக

22. கங்கவெட வீதியின் மஹவெலி ஆற்றின் கரையோர பிரதேசங்களில் பெரஹராவில் கொண்டு செல்லும் யானைகளை பகலிலோ அல்லது இரவிலோ கட்டி தரித்து வைப்பதை தடை செய்கின்றேன்.

**15 ஆவது அத்தியாயம்**

(அ) பட்டாசு வெடிப்பொருட்கள் போன்றவை பற்ற வைத்தல் தடை செய்யப்பட்டுள்ளது.

(ஆ) பிரதேச செயலாளரின் அல்லது அதிகாரம் பெற்ற ஒருவரின் அங்கீகாரம் இல்லாமல் எவரேனும் ஒருவரினால் இலக்கம் 03 இல் குறிப்பிடப்பட்டுள்ள முகாம் பூமிக்குள் சீட்டுக்கள் கொடிகள் விற்பனை மற்றும் வேறு வகையான எந்தவொரு விடயத்திற்காகவும் பங்களிப்பு நிதி வசூலிக்கக்கூடாது.

டப்ளிவ். விமங்ச செனவிரத்ன,
பிரதேச செயலாளர்,
மஹியங்கனை.

**மஹியங்கனை எசல உற்சவம் - 2025**

362 ஆம் அதிகாரமான யாத்திரைகள் கட்டளைச் சட்டத்தில் வெளியிடப்பட்டுள்ள 1948 ஆம் ஆண்டு செத்தெம்பர் மாதம் 10 ஆந் திகதிய 9902 ஆம் இலக்க வர்த்தமானப் பத்திரிகையிலும், 1951 ஆம் ஆண்டு ஒகத்து மாதம் 17 ஆம் திகதிய 10283 ஆம் இலக்க வர்த்தமானப் பத்திரிகையிலும், 1955 ஆம் ஆண்டு மாச்சு 25 ஆம் திகதிய 14778 ஆம் இலக்க வர்த்தமானப் பத்திரிகையிலும், 1967 ஆம் ஆண்டு யூன் மாதம் 09 ஆம் திகதிய 14752 ஆம் இலக்க வர்த்தமானப் பத்திரிகையிலும் வெளியிடப்பட்டுள்ள மஹியங்கனை தலயாத்திரை யாப்பிலும் 1992 ஆம் ஆண்டின் 58 ஆம் இலக்க அதிகாரங்களை கையளித்தல் (பிரதேச செயலாளர்கள்) சட்டத்தின் படியும் மஹியங்கனை பிரதேச செயலாளர்/ முகாம் பொறுப்பதிகாரி விக்ரமநாயக விமங்ச செனவிரத்ன ஆகிய எனக்கு கையளிக்கப்பட்டுள்ள அதிகாரங்களுக்கமைய கீழ்க் குறிப்பிடப்பட்டுள்ள இடங்களில் யாத்திரிகர் களுக்கு உணவு, குடிபானங்களை பகிர்ந்தளிப்பதற்காக மற்றும் விற்பனைக்காக ஒதுக்குகின்றேன்.

(அ) மஹியங்கனை பிபில வீதியின் கி.மீ. 37 இருந்து தேசிய பாடசாலைக்கு முன்னால் காணப்படும் 2/39 வடிகாண் வரை உள்ள நிரந்தர கட்டிடம்

(ஆ) முகாம் பிரதேச யாத்திரிகர்களுக்கு தங்குவதற்காக ஒதுக்கப்பட்டுள்ள மைதானத்தின் என்னிடம் பெற்றுக் கொண்ட அனுமதிப் பத்திரம் மூலம் நிர்மாணிக்கப்பட்டுள்ள தற்காலிக கட்டிடம்.

மேற்கூறப்பட்ட இடங்களை தவிர முகாம் பிரதேசத்திற்குள் வேறு எந்த இடமோ, அல்லது பூமியோ இதற்காக தடை செய்யப்பட்டுள்ளது.

**டப்ளிவ். விமங்ச செனவிரத்ன,**
பிரதேச செயலாளர்,
மஹியங்கனை.

மஹியங்கனை பிரதேச செயலகம்,
2025, ஒகத்து 05.

EOG 08-0100

இலங்கை அரசாங்க அச்சுத் திணைக்களத்தில் அச்சிடப்பட்டது.